யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.
# J/ Hartley College, Point Pedro.

முதலாம் தவணைப் பரீட்சை–2020 – தரம் 06
## First Term Examination – 2020 – Grade 06

செயன்முறைத் தொழில்நுடபத்திறன்கள் | T | I, II | இரண்டு மணித்தியாலம் Two Hours

சுட்டெண் Index No

செயன்முறைத் தொழில்நுடபத்திறன்கள்

பகுதி - I

**மிகப் பெருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

01. சிறியளவில் உட்கொள்ளப்பட வேண்டிய உணவு
 1. பழங்கள், மரக்கறி  2. தானியங்கள் கிழங்குகள்
 3. கொழுப்பும் சீனியும்  4. மீன் இறைச்சி

02. மண்ணைத் தூர்வையாக்கும் பிராணிகள் எவை
 1. செண்பகம், சிலந்தி  2. மண்புழு, பிள்ளைப் பூச்சி
 3. தவளை, வெட்டுக்கிளி  4. ஓணான், வண்டு

03. சட்டகத்துடன் கூடிய உயர் பாத்தி அமைக்கத் தேவையான அகலம் யாது?
 1. 2m  2. 1m  3. 3m  4. ½m

04. தண்டுத்துண்டங்கள் நட்டு வளர்க்கக் கூடிய பயிரினம்
 1. பயிற்றை  2. கத்தரி  3. கங்குன்  4. வெண்டி

05. வெளிவரும் நாற்றம் காரணமாக பூச்சிகளை விரட்டும் தாவரம் அல்லாதது
 1. கற்றாளை  2. புதினா  3. இஞ்சி  4. வெங்காயம்

06. தளவடிவங்களை வகைப்படுத்துக
 1. 3  2. 4  3. 2  4. 5

07. வித்துக்களை நாற்று மேடையில் இட்டு நாற்றுக்களாக நடக்கூடிய பயிரினம்
 1. இஞ்சி  2. வெண்டி  3. பாகல்  4. கத்தரி

08. பயிர் நண்பன் பூச்சிகளைக் கவரும் தாவரமாக கொள்ளக்கூடியது
 1. கரட்  2. பூடு  3. புகையிலை  4. மிளகாய்

09. உணவின் தரப்பண்பை நிர்ணயிக்கும் காரணிகள்
 1. போசணைப் பெறுமானம்  2. நிறம்  3. இழையமைப்பு  4. மேற்கூறிய யாவும்

10. இரவு முழுவதும் நீரில் ஊறவிட்டு நடும் பயிர்
 1. தக்காளி  2. வெண்டி  3. கோவா  4. மிளகாய்

11. உணவுக்கூம்பகம் எத்தனை தொகுதிகளாக பிரிப்பட்டுள்ளன.
 1. 5  2. 6  3. 4  4. 3



kalvi.lk

12. அவித்த அரிசியிலுள்ள விற்றமின் எது
1. $B_2$ 2. $B_1$ 3. $B_6$ 4. $B_{12}$

13. நாளாந்தம் அதிகளவில் உட்கொள்ள வேண்டிய உணவுகள்
1. கொழுப்பு, சீனி 2. மீன், முட்டை 3. பால் உணவுகள் 4. மரக்கறி, பழவகை

14. நத்தைகளை உண்ணும் பிராணி எது
1. செண்பகம் 2. தவளை 3. ஓணான் 4. ஆமை

15. சுவையூட்டிகளாக பயிரிடப்படும் பயிரினம்
1. குரக்கன் 2. திப்பிலி 3. இஞ்சி 4. இறுங்கு

16. சிறு மீன்களை பொரித்து முள்ளுடன் உண்பதால் கிடைப்பது
1. விற்றமின் 2. கல்சியம் 3. பொஸ்பரஸ் 4. புரதம்

17. புதிய மீனின் இயல்புகளாக காணப்படுபவை
1. உறுதியற்ற செதில்கள் 2. கறுப்பு நிறமான பூக்கள்
3. பிரகாசமான கண்கள் 4. குழி விழும் இழையமைப்பு

18. உக்கலடையாத மூடுபடையாக அமைவது
1. பொலித்தீன் 2. கடதாசி 3. வைக்கோல் 4. வாழைமடல்

19. முறைசார் வடிவங்கள் அல்லாதது எது
1. 2. 3. 4.

20. தானியங்களில் காணப்படும் பிரதான போசணை எது?
1. காபோவைதரேற்று 2. புரதம் 3. இலிப்பிட்டு 4. கனியுப்பு

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

## பகுதி - II
### எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை தருக

01.
1. பாடசாலைத் தோட்டத்தில் இலகுவாகப் பயிர்செய்யக்கூடிய பயிர்கள் 2 தருக?
2. தாவரங்களில் ஏற்படும் 2 நோய்கள் தருக?
3. விரைவில் பழுதடையும் உணவுகள் 2 தருக?
4. பழுதடைந்த முட்டையை எவ்வாறு இனங்காண்பீர்?
5. புரதம் அடங்கியுள்ள உணவுகள் 3 தருக?

(10 புள்ளிகள்)

02.
1. நாம் உட்கொள்ளும் உணவுகள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டியமைக்கான காரணங்கள் 2 தருக?
2. நிறை உணவு என்றால் என்ன?
3. புராதன காலத்தில் செய்திகளை பரிமாற கையாண்ட 2 முறைகளைத் தருக?
4. பால் உணவுகள் இரண்டு தருக?
5. பூச்சிகளை உண்ணும் பிராணிகள் 2 தருக?

(10 புள்ளிகள்)

03.
1. ஆரம்ப சிகிச்சை என்றால் என்ன?
2. நடுகைப் பொருட்கள் 4 தருக?
3. சட்டகத்துடன் கூடிய உயர் பாத்தியில் பயிர் செய்வதால் கிடைக்ககூடிய நன்மைகள் 2 தருக?
4. தயார் செய்த உணவுகளைக் கொள்வனவு செய்யும் போது பரிசீலிக்க வேண்டிய விடயங்கள் 2 தருக?
5. மரக்கறி பழங்களில் காணப்படும் போசணைகள் 2 தருக?

(10 புள்ளிகள்)

04.
1. உயர் பாத்திக்கான சட்டகத்தினை அமைக்கப் பயன்படும் பொருட்கள் 2 தருக?
2. உக்கலடையாத மூடுபடை 2 தருக?
3. நோய்களை பீடைத்தாக்கத்தைக் குறைக்க கரைசலாக பயன்படுத்தக்கூடியவை 2 தருக?
4. வித்துக்களுக்கான ஆரம்ப சிகிச்சை 2 தருக?
5. தாவரங்களால் மனிதனுக்கு கிடைக்கும் பயன்கள் இரண்டு தருக?

(10 புள்ளிகள்)



kalvi.lk

# தரம் 6,7,8

# தமிழ்

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் தமிழ் பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**மாதக் கட்டணம்**

**850/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page